**சுருக்கம்**

பணியமைப்பு – மாற்றுத் திறனாளிகள் நலத் துறை – சிறப்புப் பள்ளிகள் – பார்வைத் திறன் குறையுடையோருக்கான அரசு சிறப்புப் பள்ளிகளில் 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு ஆஞ்சல் ப்ரோ டெய்சி பிளேயர் (Angel Pro Daisy Player) எனும் உயர் தொழில்நுட்ப உதவி உபகரணங்கள் வழங்குதல் – 2018–2019ஆம் ஆண்டிற்கு திட்டத் தொடராணை மற்றும் ரூ.8,76,960/– நிதி ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை (டி) எண்: 15**

**நாள்: 20.05.2019**
**விகாரி – வைகாசி, 6**
**திருவள்ளுவர் ஆண்டு, 2050**

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (ப) எண் 79, மாற்றுத் திறனாளிகள் நல (மாதிந–1)த் துறை, நாள் 15.11.2017.
2. அரசாணை (ப) எண் 18, மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை, நாள் 12.03.2018.
3. மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரின் கடித ந.க. எண் 1960/சிப.3/2018, நாள் 21.02.2019.

–––––

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், பார்வைத்திறன் குறையுடையோருக்கான அரசுப் பள்ளிகளில் 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு 2016–2017ஆம் ஆண்டிற்கு DVD பிளேயர் உடன் ஹெட்போன் வாங்கி வழங்கிட ரூ.7,28,000/– நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், பார்வைத்திறன் குறையுடையோருக்கான அரசு சிறப்புப் பள்ளிகளில் 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் 120 மாணவ / மாணவியர்களுக்கு 2017–2018ஆம் நிதியாண்டில் DVD Player–க்கு பதில் 'ஆஞ்சல் ப்ரோ டெய்சி பிளேயர்' (Angel Pro Daisy Player) என்னும் உயர் தொழில்நுட்ப உதவி உபகரணம் வாங்கி வழங்குவதற்கு திட்டத் தொடராணையும், இச்செலவினத்திற்கென ரூ.9,07,200/– (ரூபாய் ஒன்பது இலட்சத்து ஏழாயிரத்து இருநூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பும் செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர் அவர்கள், மேற்கூறப்பட்டுள்ள அரசாணையின்படி, ஒரு சாதனம் ரூ.7560/– (ஜி.எஸ்.டி. உட்பட) என்ற விலையின் அடிப்படையில் 120 'ஆஞ்சல் ப்ரோ டெய்சி பிளேயர்' (Angel Pro Daisy Player) என்னும் உயர் தொழில்நுட்ப உதவி உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டு மாணவர்களுக்கு வழங்கி செலவினம் மேற்கொள்ளப்பட்டது எனத் தெரிவித்துள்ளார். மேலும், 2018–2019ஆம் ஆண்டிற்கு 'ஆஞ்சல் ப்ரோ டெய்சி பிளேயர்' (Angel Pro Daisy Player) என்னும் உயர் தொழில்நுட்ப உதவி

(த.பி.பா.)

உபகரணம் வழங்கிட அரசு பார்வைத் திறன் குறையுடையோருக்கான பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்களின் எண்ணிக்கை விவரங்களை பின்வருமாறு அளித்துள்ளார்:—

| **வ. எண்** | **பள்ளியின் பெயர்** | **10ஆம் வகுப்பு மாணவ / மாணவியர்களின் எண்ணிக்கை** | **12ஆம் வகுப்பு மாணவ / மாணவியர்களின் எண்ணிக்கை** | **மொத்தம்** |
|---|---|---|---|---|
| 1. | முதல்வர், பார்வைத் திறன் குறையுடையோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி, பூவிருந்தவல்லி. | 19 | 28 | 47 |
| 2. | பார்வைத் திறன் குறையுடையோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி, தஞ்சாவூர். | 15 | 28 | 43 |
| 3. | பார்வைத் திறன் குறையுடையோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி, புத்தூர், திருச்சி. | 11 | 15 | 26 |
| **மொத்தம்** | | **45** | **71** | **116** |

**4.** மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர் அவர்கள் இத்திட்டத்தை **2018—2019**ஆம் நிதியாண்டிற்கும் தொடர 'ஆஞ்சல் ப்ரோ டெய்சி பிளேயர்' (Angel Pro Daisy Player) கொள்முதல் செய்வதற்கு **3** நிறுவனங்களிடம் விலைப்புள்ளிகள் பட்டியல் பெறப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளியான ரூ.**8,76,960/—** என்ற பட்டியலை அளித்துள்ள Index Assistive Technologies, 30 Maker Arcade Parade, Mumbai-400 005 என்ற நிறுவனத்தை அனுமதிக்கலாம் எனத் தெரிவித்துள்ளார். குறைந்த விலைப் புள்ளியின்படி 'ஆஞ்சல் ப்ரோ டெய்சி பிளேயர்' (Angel Pro Daisy Player) ஒன்றின் விலை ரூ.**7200/—** மற்றும் GST ரூ.**360/— (5%).**

**116** ஆஞ்சல் ப்ரோ டெய்சி பிளேயர்
(Angel Pro Daisy Player)
(Rs.7560 x 116 Nos. incl. GST at 5%) } ரூ.**8,76,960/—**

-----------------

மொத்தம் — ரூ.**8,76,960/—**

----------

**5.** மேலும் மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர், பார்வைத்திறன் குறையுடையோருக்கான அரசு சிறப்புப் பள்ளிகளில் **10**ஆம் வகுப்பு மற்றும் **12**ஆம் வகுப்பு பயிலும் **116** மாணவ / மாணவியர்களுக்கு **2018—2019**ஆம் நிதியாண்டில் ஆஞ்சல் ப்ரோ டெய்சி பிளேயர்(Angel Pro Daisy Player) என்னும் உயர் தொழில் நுட்ப உதவி உபகரணங்கள் வாங்கி வழங்குவதற்கு ரூ.**8,76,960/—** (ரூபாய் எட்டு இலட்சத்து எழுபத்தாறாயிரத்து தொள்ளாயிரத்து அறுபது மட்டும்) நிதி ஒதுக்கீடும், உரிய திட்டத் தொடராணையும் வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

**6.** மேற்காணும் மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரின் கருத்துருவினை பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று, பார்வைத்திறன் குறையுடையோருக்கான அரசு சிறப்புப் பள்ளிகளில் **10**ஆம்

வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் 116 மாணவ / மாணவியர்களுக்கு ஆஞ்சல் ப்ரோ டெய்சி பிளேயர்(Angel Pro Daisy Player) என்னும் உயர் தொழில் நுட்ப உதவி உபகரணங்கள் வாங்கி வழங்க திட்டத் தொடராணையும் இச்செலவினத்திற்கென ரூ.8,76,960/– (ரூபாய் எட்டு இலட்சத்து எழுபத்தாறாயிரத்து தொள்ளாயிரத்து அறுபது மட்டும்) நிதி ஒப்பளிப்பும் செய்து ஆணையிடுகிறது.

7. மேலே பத்தி–6ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

“2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும்–02 – சமூக நலன்–101 – மாற்றுத் திறனாளிகள் நலன் – மாநிலச் செலவினங்கள்–AA பார்வையற்றோர் பள்ளி–324 – பொருள்களும் வழங்கலும்.”

[த.தொ.கு. 2235–02–101–AA–32400]

8. மேற்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட்டு ஒப்பளிக்கப்பட்டுள்ள தொகைக்கான செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர் அவர்களுக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

9. இவ்வாணை நிதித்துறையின் அலுவல்சாரா எண் 21183/நிதி(சந)/2019, நாள் 17.05.2019–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சா. விஜயராஜ் குமார்
அரசு செயலாளர்

**பெறுநர்**

மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர், சென்னை–5.
மாநிலக் கணக்காயர், சென்னை–18 / பெயரில்.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
மாவட்ட ஆட்சித் தலைவர்கள், தஞ்சாவூர், திருச்சி மற்றும் திருவள்ளூர்.
(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)

**நகல்:**

நிதி (ச.ந.)த் துறை, சென்னை–9.
அரசுச் செயலரின் முதுநிலை முதன்மைத் தனிச் செயலர்,
மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, சென்னை–9.
இருப்பு தணிக்கை அலுவலர், சென்னை–9.
உதிரி நகல் / இருப்பு கோப்பு.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.